**புதிய வகுப்புகள்**
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 1-2-80
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 21 · தை 17 · ரபி-அவ் 12 · இதழ் 353
யாழ்ப்பாணம் · வியாழக்கிழமை · 31-1-80

## இந்திரா மீது 36 கமிஷன்கள்!

(புதுடில்லி)
ஜனதா ஆட்சிக்காலத்தில் தம்மீது 36 கமிஷன் விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டதாக இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்று இந்திய லோகசபையில் கூறினர்.
அரசதரப்பு உறுப்பினர்கள் ''வெட்கம் வெட்கம்'' என்று குரலெழுப்பினர்கள்.

★ அரச ஊழியர் வேலைநேரம்

# குழு நியமித்து ஆராயமுடிவு

## போக்குவரத்து அமைச்சரிடம் பொறுப்பு

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் வேலைநேரம் தொடர்பாக ஆராய்ந்து செயற்படுத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்படவிருக்கின்றது. இந்தக் குழுவை நியமிக்கும் அதிகாரம் போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். முகம்மத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் வேலைநேரம் லீவுகள், விடுமுறை நாட்கள் போன்றவற்றுடன் சகல ஊழியர்களுக்குமான பொதுவான மதிய போசன இடைவேளைபோன்ற விஷயங்களை இக் குழு ஆராயும்.

நேற்றுக்கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன. அண்மையில் ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவைச் சந்தித்து ஆலோசனை நடத்திய தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் மேற்படி குழு செயல்படும் என்று தெரிகின்றது.

### விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் இன்னும் 5 மாதத்தில விசர்நாய்க்கடி நோய்த் தடுப்பூசி போடப்படும். இது தொடர்பாக சுகாதாரஅமைச்சர் தெரிவித்த யோசனை ஒன்றை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. நாட்டிலுள்ள நாய்கள், பூனைகளை மலடாக்கும் திட்டமொன்று பற்றியும் அமைச்சரவை ஆலோசனை நடத்தியது.

### கோட்டை புனிதநகர்

கோட்டையில் ஜயவர்த்தனபுரத்திலுள்ளரஜமகவிகாரைப் பகுதியை புனிதநகரமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் அமைச்சரவை தீர்மானித்தது.

### பாய்மரவள்ளங்களுக்கு மான்யம்

மீனவர்கள் யந்திரப்படகுகளைப் பாவிப்பதை நிறுத்தி பாய்மரவள்ளங்களைப் பாவிக்க ஊக்களிக்கும் நோக்கத்துடன் இந்த வள்ளங்களை வாங்குவதற்கு 75 வீதம் மான்யம் வழங்குவதென்று மந்திரிசபை முடிவுசெய்தது. எரிபொருளை மீதப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

ஒட்டுப்பலகைக் கதவுகளை இறக்குமதி செய்பவர்களுக்கு விதிக்கப்படும் வரியை ரத்து செய்வதென்று முடிவுசெய்யப்பட்டது. தனியார் கம்பனிகளும் இக் கதவுகளை இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்படும்.

மின்சார ரான்ஸ்மோர்மர் உற்பத்திசெய்யும் நிலையமொன்றை பிரிட்டிஷ் நிறுவனமொன்றின் உதவியுடன் அரசு நிறுவ உத்தேசித்துள்ளது. (ம)

மன்னருக்கு

## ரூபா 6 கோடி செலவில் மின்சாரத் திட்டம்

(கொழும்பு)
மன்னருக்கு மின்சாரம் வழங்குவதற்கான 6 கோடி ரூபாய் செலவில் திட்டமொன்று செயல்படுத்தப்படவிருக்கின்றது.

இத்திட்டத்துக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்தது. மன்னர் மாவட்ட மின்சார அபிவிருத்தித் திட்டம் ஒன்றை 6 கோடி ரூபா செலவில்மேற்கொள்வதென்று நேற்று அமைச்சரவை முடிவு செய்தது.

இந்தப் பணத்தில் 5 கோடி 10 லட்சம் ரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாகப் பெறுவதென்றும் மிகுதி 9 லட்சம் ரூபாவையும் உள்நாட்டில் நிதிகளிலிருந்து செலவிடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் அநுராதபுரத்திலிருந்து மன்னர் வரையிலுள்ள 50 மைல் தூரத்துக்கு சிங்கிள் சர்க்கிட் அமைப்பில் மின்சாரத்தை வழங்கவும் ஏனைய பகுதிகளுக்கு உப மின்நிலையங்களை அமைத்து மின்சாரம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

## 3 லட். 90 ஆயிரம் அகதிகள்

காபூல், ஜன. 30
ஆப்கானிஸ்தான் வடமேற்கு மாகாணத்தில் 3 லட்சத்து 90 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர் என்று மேற்படி மாகாண கவர்னர் தெரிவித்துள்ளனர். (இ)

எம். ஜி. ஆர். பதவி விலகக்கோரி

# கவர்னர் உரையின்போது எதிர்க்கட்சி வெளிநடப்பு!

(சென்னை)
அ. தி. மு. கழக தமிழ்நாடு அரசாங்கம் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று கோரி நேற்று எதிர்க்கட்சியினர் சட்டசபை கூட்டுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

தமிழ்நாடு சட்டசபை கூட்டுக் கூட்டத்துக்குநேற்று தமிழ்நாடு கவர்னர் திரு.பிரபுதாஸ் பட்வாரி வருகை தந்தபொழுது இந்த வெளிநடப்பு இடம்பெற்றது. கவர்னர் தமது ஆசனத்தில் அமர்ந்ததும் எதிர்க்கட்சிகளான இந்திரா காங்கிரஸ், தி. மு. கழகம், அகில இந்திய முஸ்லிம் லீக், போர்வாட்புளக் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எழுந்து தனித்தனியே தமது கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு வெளியேறினர்கள். அவர்களைத் தொடர்ந்து அக்கட்சிகளின் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர் இவர்கள்பத்திரிகை நிருபர்களிடம் தாம் வெளிநடப்புச் செய்ததற்கான காரணங்களை விளக்கினர்கள்,

லோகசபைக்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ, தி. மு. கழகம் பல இடங்களில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றது. இதனல் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்ட நிலையில் தொடர்ந்தும் அக்கட்சிபதவியிலிருக்க உரிமையில்லை. உடனடியாகப்பதவி விலக வேண்டும் என்பதை வற்புறுத்தவே வெளிநடப்புச் செய்யப்பட்டதென்று அவர்கள் விளக்கினர்கள்.

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
ஹொண்டா
(HONDA) C D-185
ரேட்மாஸ்டர் மொடல் மோட்டார் சைக்கிள்-புத்தம் புதிதாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
இ. ஸ்ரீகாந்தன் (செந்தூர்), C.M.S. லேன், கொக்குவில் மேற்கு-கொக்குவில். 4829

## திருமணம்

மணமகன்: திருவளர் செல்வன்
**கே.ஜி. கிருஷ்ணபிள்ளை**
(அரசாங்க நில அளவையாளர்)

மணமகள்: திருவளர் செல்வி
**செம்மனச்செல்வி மயில்வாகனம்**

காலம்: 02-02-1980 சனிக்கிழமை பிற்பகல் 12.45-2.35 வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தம்
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம் நல்லூர்
வரவேற்பு: 02-02-80 மாலை 6.00-9.00மணி வரை (மணமகன் இல்லம்)



நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்)

**திருமதி. கற்பகம் கோபாலபிள்ளை**
658/7, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**நா. க. மயில்வாகனமும் பாரியாரும்**
(பிரபல வர்த்தகர் - கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம்)
808/4, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
4830

உ
## திருமண அழைப்பு

நிகழும் சித்தார்த்தி வருடம் தை மாதம் 19-ந்திகதி (2-2-80) சனிக்கிழமை பிற்பகல் 12-44 மணிமுதல் 2-35 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**செல்வரத்தினம்**
அவர்களுக்கும்
(இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாணம்)

எமது புதல்வி
திருநிறைசெல்வி
**சிவதேவி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்பசமேதரராய்ச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி
பொ. வேலுப்பிள்ளை
வாசிகசாலையடி,
உடுப்பிட்டி.

திருமதி
செ. வைத்திலிங்கம்
சேந்தான்குளம்வீதி,
இளவாலை வடக்கு, இளவாலை.
4833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

பலதரங்களிலும் எழுதப் பேச பரீட்சைகளுக்கு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரால் ஆங்கிலம், ஆறு தொடக்கம் G. C. E. சாதாரணம், உயர் தரத்திற்கு கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், இலண்டன் பரீட்சைக்கான கணக்கியல், வட இலங்கைச் சங்கீத சபையினரின் பரீட்சைகளுக்கு வயலின், பாட்டு, வாத்தியங்கள் - கலாநிலையம், மாவடி, வட்டுக்கோட்டை. 4841

### விற்பனைக்கு

புதிய வீட்டுடன் 3½ பரப்புக் காணி சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர் மார்க்கட்டுக் கருகாமையில் உண்டு. பயன்தரும் தென்னை, மா உண்டு. தொடர்புகொள்ளவும். தி. குமாரசாமி, சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர். 4821

### WANTED

Bishop's Private Secretary Male. English Shorthand Typist. Salary Negotiable. Apply Treasurer, Diocesan Office, Vaddukoddai. 4834

### தேவை

உழவு வேலையில் நல்ல அநுபவமுள்ள உழவுயந்திர சாரதி தேவை. தொடர்கொள்க, 27, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4844

கோட்டு விற்பனவு
### விளம்பரத் திருத்தம்

யாழ். மாவட்ட கோடு ஈடு இல: 446.

23-1-80-ந் திகதி ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமான மேற்படி ஈடு வழக்கில் சம்பந்தப்பட்ட ஆதனத்தின் மேற்கு எல்லை: வலோரியாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமாகும்.

எஸ். சங்கரப்பிள்ளை,
வேல்பதி, கொம்மிஷனர்,
புத்தூர். விலமதிப்பாளர்.
4835

## மூன்றுவது ஆண்டு நினைவு
### அஞ்சலி



செல்வி
தெய்வமலர் கோபால்

தோற்றம்: 24-08-19 — மறைவு: 31-1-1977

பாசத்தின் இருப்பிடமே! எங்களை நீர் விட்டுப்பிரிந்தாலும், உமது அன்பு நினைவுகள் எங்களைவிட்டு அகலாது.

தாயார், தந்தையார்,
சகோதரர்கள், சகோதரிகள்,
உறவினர்கள்.

''ரஜனி இல்லம்''
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. 4840

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சப்பல் வீதி, 30ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கிறிஸ்ரி துரையையா யோசுவா என்பவரின் மரணசாதனத்தின்/மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

லெஸ்லி யோசுவா தர்மராஜ், 51/4, நொரிஸ் கனல் வீதி, கொழும்பு-10,
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3496

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 8-ஆந் நாளன்று முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1980-ஆம் ஆண்டு தை மாதம் 22-ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
4838

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், சப்பல் வீதி, 30ஐச் சேர்ந்த காலஞ்சென்ற மேரி நல்லம்மா யோசுவா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்

லெஸ்லி யோசுவா தர்மராஜ், 51 4, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு-10
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3487

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிருவகிப்பதற்காகமேற்படிநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 8-ஆம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1980-ஆம் ஆண்டு தை மாதம் 22-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
4839


செங்கலடி

# கிராமியவாங்கி கொள்ளை வழக்கு ஜூன்2-ல் விசாரணை

## ஜூரர்களின்றி விசாரணை

(கொழும்பு)

செங்கலடிக்கிராமிய வங்கிக்குச் சேரவேண்டிய 1,77,300 ரூபாவை கொள்ளையடித்ததாக நால்வருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டவழக்கு ஜூரிகள் இன்றி ஜூன்மாதம் 2-ம் திகதி விசாரணை செய்யப்படும்.

பரமதேவா, விஜயசுந்தரம், ரஞ்சன் கனகரத்தினம், வாமதேவன் ஆகிய மேற்படி நான்கு எதிரிகளும்25 ஆயிரம் ரூபா பெறுமதியான கார் ஒன்றைக் கொள்ளையடித்து இப்பணத்தை கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நான்கு எதிரிகளும் பலத்த பாதுகாவலுக்கு மத்தியில் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு ஏற்கனவே ஜூரிகள் முன் விசாரணை செய்யப்பட்டதாகவும் சிறு சம்பவம் ஒன்று காரணமாக வழக்கு இடைநிறுத்தப்பட்டு மறு விசாரணைக்கு உத்தரவிட்டதாகவும் எதிரிகளின் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் நீதிபதிமுன் தெரிவித்தார்.

அரசுதரப்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ரோஷான்ஜயதிலககுற்றவியல் சட்டக்கோவையின் கீழ் இவ்வழக்கைஜூரிகளின்றி நடத்துமாறு கோரி நீதிபதி முன்மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்தக் கொள்ளை வழக்கு விசாரணைக்காகவே ஜூரிகளின்றி விசாரணை செய்யலாமெனச் சட்டம் திருத்தப்பட்டதாக எதிரிகளின் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

கடந்தவருட ஜூன்மாதம் மறுவிசாரணைக்கு உத்தரவிடப்பட்ட அதேவேளையில் ஜூன் மாதம் ஜூரிகளின்றி விசாரணை நடத்தலாம் என்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அரசு தரப்புச் சட்டத்தரணி 1978 நவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட நீதித்துறை சட்டத்தின்கீழ் ஜூரிகளின்றி விசாரணை நடத்துவதற்கு அனுமதியுண்டு என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் முன்பு ஜூரிகள் முன்னிலையில் நடைபெற்ற வழக்குகள் கூட அந்தச் சட்டத்திற்கு உட்படுவதாக திருத்தம் கடந்தவருடம் ஜூன் மாதமே கொண்டுவரப்பட்டதாக தெரிவித்தார். நீதித்துறைச் சட்டமும், குற்றவியல் திருத்தச் சட்டமும் கடந்த வருடம் ஜூலை மாதமே அமுலுக்கு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு ஜூரிகளின்றி ஜூன்மாதம் 2-ம்திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. எல். எம். செனவிரத்தின உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரத்துடன் சட்டத்தரணி திரு. எஸ், உருத்திரமூர்த்தியும் ஆஜரானார். (வெ)

## பிரிவுபசாரம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் தொழில் புரிந்து இளைப்பாறும் இரு உத்தியோகத்தர்களுக்குசீமெந்துத் தொழிற்சாலை கத்தோலிக்க சங்கம் பிரிவுபசார விழாவொன்றை நடத்தியது.

உதவி பாதுகாவல் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். பிலிப், கற்குழிப் பகுதியில் கடமையாற்றிய எஸ். சிங்கராசா ஆகியோர் இளைப்பாறுவதை பெயாட்டிய இவ்விழா நடாத்தப்பட்டது. காங்கேசன்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நடந்த இவ்விழாவில் திருப்பலிப்பூசை நிறைவேற்றப்பட்டு நன்றித் தோத்திரப் பாடல் பூசையும் இடம்பெற்றதுடன் இளைப்பாறுவோர்களுக்கு சகாயநிதியும் சங்கத்தால் வழங்கப்பட்டது.

# பண்டத்தரிப்பில் கோஷ்டி மோதல்: இருவர் ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புப் பகுதியில் இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மாணவன் ஒருவன் உட்பட மூவர் காயமடைந்து யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுக் காயங்களுக்கு இலக்கான 14 வயதுமாணவன் இராயப்பு ஜெயரத்தினம் கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.

பண்டத்தரிப்பிலுள்ள ஒரு கோவில் பங்கைச்சேர்ந்த மக்களுக்குள் ஏற்பட்ட பகைமை காரணமாகவே இச்சம்பவம் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்கிராமத்தில்சட்டவிரோதமாகச் சாராயம் காச்சும் இடங்களிலிருந்து இயந்திர சாதனங்களைப் பொலிசார் கைப்பற்றியதை அடுத்து இக்கலவரம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இக்கிராமத்தில் நிலவும் அமைதியின்மை குறித்து பங்குகுரவர் வண. இ. ஜோசப்பு அடிகளார் பொலிசாரின் உதவியுடன் சமாதான உடன்படிக்கை செய்துள்ளபோதிலும் பதட்டநிலை இன்னும் நீங்கவில்லை. (அ)

# பறைக்குள்ளிருந்து தாலிக்கொடி மீட்பு!
## தந்தையும் மைந்தனும் கைது!

(புலோலி)

பட்டப்பகலில் பூட்டப்பட்டிருந்த வீடு உடைக்கப்பட்டு, பெட்டியிலிருந்த 20 000ரூபா பெறுமதியான தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வாணக்குடியருப்பில் உள்ள திருமதி அன்னம்மா என்பவர் வீட்டிலேயே இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவ தினம் பகல் 10 மணியளவில் வீட்டு மையாளரான திருமதி அன்னம்மா வீட்டைப் பூட்டிவிட்டு உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று ஒரு மணிநேரம் தாமதித்து திரும்பி வந்தபோது வீடுடைக்கப்பட்டு தாலிக்கொடி திருடப்பட்டிருந்தது தெரிந்ததாம், இதுபற்றி பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்து பசுபதி (சிவக்கொழுந்து) என்பவரைக் கைதுசெய்துள்ளனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் பட்டினசபை
### எட்டரைலட்சம் ரூபாவை செலவு செய்யும்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்ப்பட்டின சபைக்கு இவ்வருடத்தில் வருமானமாக 8 லட்சத்து 57 ஆயிரம் ரூபா கிடைக்குமென்றும், 8 லட்சத்து 56 ஆயிரம் ரூபா செலவிடப்படும் என்றும் பட்டினசபை விசேட ஆணையாளர் தயாரித்துள்ள 1980 ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பட்டினசபை பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு 60 ஆயிரம் ரூபாவும், மின்சார விஸ்தரிப்புக்கு 90 ஆயிரம் ரூபாவும், நூல் நிலையத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும். சந்தை விஸ்தரிப்புக்கு காணியொன்றைச் சுவீகரிப்பு செய்வதற்காக 10 ஆயிரம் ரூபாவும் வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (கு)


பொறியியல் உபகரணங்கள்
**Engineering Set**

பொறியியல் மாணவர்க்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

விலை ரூபா 300 - 00

**நியூ விக்ரேஸ்**

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7804

## அருளுரை
### குருமகராஜ்ஜியின்

பிரதம சிஷ்யர்களுள் ஒருவரான
**மகாத்மா - சிவ்சமே சிங் அவர்கள்**

(1) 1-2-80 வெள்ளி மாலை 5-30 மணிக்கு யாழ் வீரசிங்க மண்டபத்திலும்,
(2) 14-2-80 வியாழன் மாலை 6 மணிக்கு புலோலி மேற்கு ஆத்தியடி இந்து வாலிபர் சங்கம் Y. M. H. A.] மண்டபத்திலும், தெய்வீக ஒளிச்சங்க ஆதரவில்

சத்சங்க உரை நிகழ்த்துவார்கள்.

''குருமகராஜ்ஜி'' - ''ஞான அறிவு'' - ''உள் அமைதி'' என்பன குறித்து அறிய ஒன்று சேருங்கள். (4830)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வணக்கம் உள்ளத்திலிருந்து எழவேண்டும், குரலிலுண்டாவதல்ல. உள்ள உணர்ச்சியில்லாவிட்டால் சொற்களுக்குப் பொருளில்லை.

-மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### அத்துமீறல் முறையல்ல

யாழ். நகரின் அழகிற்கு மெருகூட்டும்வகையில் அமைந்திருக்கும் ஒரேயொரு துறைமுகம் குருநகர் துறைமுகம். இங்குவரும் வெளி நாட்டினர் கடற்கரையில் இருந்து அவ்வப்போது புகைப்படங்களைப் பிடித்து இன்புற்று வருவது யாவரும் அறிந்ததே. இதனை அவதானித்த முன்னைய விசேஷ ஆணையாளரும் தற்போதைய ஆணையாளருமான திரு. சிவஞானம் துறைமுகத்திற்கு மிக அருகில் 'மினிபீச்'சை உருவாக்கினர். 'மினிபீச்'சிலிருந்து துறைமுகம்வரை உலாவருவோர் தொகை அதிகரித்து வரும் இவ்வேளையில் அத்துமீறல் அதிகரித்து துறைமுகம் என்று சொல்லுவதற்கு ஒரு துளியளவும் இடமில்லாமல் கொட்டில்கள் அமைத்து நடமாடவே இடமில்லாது துறைமுகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்ததா என வருங்காலச் சந்ததியினர் ஐயமுறும் அளவிற்கு குடிசைகள் வளர்ந்து கொண்டேவருகிறது. இவற்றைச் சம்பந்தப்பட்டோரும் பாராமுகம் காட்டிவருவது தான் விந்தையாகும். மக்கள் வீடில்லாப் பிரச்சினையால் திண்டாடுவதை நாம் அறிவோம். ஆனால் அதற்குத் துறைமுகத்தில் குடிசைகள் அமைத்து, அரசினரால் வருங்காலத்தில் அபிவிருத்தி செய்யவேண்டிய துறைமுகத்தை வீண் அத்துமீறல்களால் அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பினை இழக்கச் செய்வது சரியல்ல.

ப. சோதி
யாழ்ப்பாணம்.

### அடையாள வேலை நிறுத்தம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க ஊழியர்களின் விடுமுறை நாட் குறைப்பை ஆட்சேபித்து அமைதியான முறையில் மறியல் போராட்டம் நடாத்திய தொழிற் சங்கத் தலைவர்கள்மீதும் மற்றும் தொழிலாளர்கள்மீதும் நடத்திய தாக்குதலைக் கண்டிக்குமுகமாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை இரண்டு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்தியது.

இவ்வடையாள வேலை நிறுத்தத்தில் மேற்படி கிளையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர். (கு)

……

### மீண்டும் திறக்கப்படும்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாயில் மூடப்பட்ட இலங்கை வங்கியின் கிளையை மீண்டும் அடுத்த மாதம் தொடக்கம் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மானிப்பாய் பட்டினசபை கட்டிடத்தின் ஒருபகுதியில் இந்த வங்கிக் கிளை மீண்டும் திறக்கப்படுமென்றும் இந்த இடத்தை அண்மையில் இலங்கை வங்கியின் பிரதித்தலைவர் நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களம்

# கடனுதவிகள் திடீர் நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களம் சகல கடன் நடவடிக்கைகளையும் திடீரென நிறுத்தியுள்ளது.

அத்துடன் வீடமைப்புக் கடன் விண்ணப்பப் பத்திரங்களும் மறு அறிவித்தல்வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏற்கனவே வீட்டுக்கடன்கோரி வீடமைப்புத் திணைக்களத்தில் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தவர்களுக்கும், விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுள்ளவர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதுமட்டுமின்றி விண்ணப்பப் பத்திரங்களைப் புதிதாகப் பெறச் செல்பவர்களும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

(உடுப்பிட்டி-நிரு)

### இலவச பாற்கஞ்சி

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலைப் பெற்றோர் நலன் விரும்பிகள் சங்கம் அப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவாகப் பாற்கஞ்சி வழங்க விரும்பி ஒவ்வோர் குடும்பமும் 5 தேங்காய் 5 கொத்துப்பச்சை அரிசி ஆகியவற்றை இலவசமாகக் கொடுத்துதவி வருகின்றது.

இந்த ஜீவகாருண்ய நற்பணியை நல்ல மனதுடன் செய்து வந்த குடும்பங்கள் தொடர்ந்தும் இப்பணியைத் தளரவிடாது மேற்கொள்ளுமாறு அப்பாடசாலைப் பெற்றோர் நலன் விரும்பிகளை அதிபர் கேட்டுள்ளார்.

[கோண்டாவில்]

கோண்டாவில் வடக்கு சிவகாமி அம்மன் தேவஸ்தான சபை நிர்வாகிகள்:-

தலைவர்- இராமன். யோகநாதன், செயலாளர் அப்புத்துரைசெல்வராசா, பொருளாளர்மரர்க்கண்டு குமாரசிங்கம், உப-செயலாளர்-க,நாகேந்திரம்,உறுப்பினர்கள்-சீ.மகாலிங்கம்,மா .பரமலிங்கம்,மா. குமாரசாமி, ஐ, இந்திரன்,ஐ. சுப்பிரமணியம்இ.யோகராசா க.சிவலிங்கம் (கு)

### காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்தி வேலைகள்: அமைச்சர் உறுதிக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

1965ம் ஆண்டு அமரர் டட்லி சேனநாயக்காவினல் ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன் துறை அபிவிருத்தி வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதென அமைச்சர் லலித் அத்துலத் முதலி உறுதியளித்துள்ளதை யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச்சேவை கூட்டுறவுச் சங்கம் வரவேற்று நன்றி தெரிவித்துள்ளது.

யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச்சேவை கூட்டுறவுச் சங்க கூட்டம் திரு. யே. எம். இராசு தலைமையில் நடைபெற்றது.

இச்சங்கத்திற்கு மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு அளிக்கும்பொருட்டு, அனுமதிப் பத்திரம் வழங்கியதற்காக தொழில் அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

ஏழை மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகம் வழங்கியமைதயிட்டு, அரசுக்கும், ஜனாதிபதிக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேறியது. (கொ)

## பனை வெல்லத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது மூடப்பட்டிருக்கும் பனைவெல்லத் தொழிற்சாலைகளைத்திறந்து, பனைவெல்ல உற்பத்தியை மேற்கொள்வதற்கான துரிதநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. என். கனகசூரியர் தலைமையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க தலைவர்கள் பொது முகாமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களாவன:

"தேவையான இடங்களில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

"மேலதிக கள்ளைக்கொண்டு பனம் சாராயத்தை வடிப்பதற்கான பனஞ்சாராய வடிசாலைகள் கட்டைவேலி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் அமைக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளையும் கலந்துகொண்டார்.

(புலோலி-நிரு)

### நாவலப்பிட்டி

## ஸ்ரீமுத்துமாரி அம்பாள் மகாகும்பாபிஷேகம்

### வானொலியில் நேரடி அஞ்சல்

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவிலின் மகாகும்பாபிஷேகவிழா, பெப்ரவரி மாதம் 6ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. இதனை முன்னிட்டு கடந்த பத்துத் தினங்களாக இயந்திர லட்சார்ச்சனை நடைபெற்றது.

4ம் திகதி யந்திரப் பிரதிஷ்டையும் 5ம் திகதி எண்ணைக் காப்பும், 6ம் திகதி மகாகும்பாபிஷேகமும் நடைபெறும். கும்பாபிஷேக தினத்தன்று விசேட அன்னதானமும், இரவு சுவாமி வெளிவீதி பவனியும் நடைபெறும். தேவஸ்தானத் தலைவர் திரு.டி.கிருஷ்ணசாமி தலைமையிலான பரிபாலனசபையினர் இதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

ரூபா 50 ஆயிரம் செலவில் புதிய வசந்த மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. ஸ்தபதி திரு. ச. நா. சோமசுந்தரம் தலைமையிலான சிற்பக் கலைஞர்கள் கோவில் கோபுரவேலைகளைப் புதுப்பித்து கண்கவர் புதிப்பொலிவு பெறச்செய்துள்ளனர்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்யசிவாச்சாரியார் தலைமையில் 15 குருக்கள்மார் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகளில் பங்குபற்றுவார்கள். இவ்வாண்டு புதிதாக வைரவர் விக்கிரகமும் இத்தேவஸ்தானத்தில் பிரதிஷ்டைசெய்யப்படவிருக்கிறது.

முதன்முதலாக இத்தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை வானொலியில் நேரடி அஞ்சல் செய்வதற்கான ஒழுங்குகளைப் பிரதி ராஜாங்க அமைச்சர் திரு. சந்திராசுருணரத்தின மேற்கொண்டுள்ளார். நகரபிதா ஜனுப் எஸ். வை. முகம்மது தனது செலவில் பிரஸ்தாப தேவஸ்தானத்துக்கு வர்ணமின்சார ஒளியூட்ட முன்வந்துள்ளார்.

கும்பாபிஷேக விழாவில கோயம்புத்தூர் சாந்தலிங்க மடாயத்தலைர்வ ஸ்ரீ ல ஸ்ரீ இராமசாமி அடிகளார்,ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. முத்தையா ஆகியோர் அருளுரை வழங்குவர்.

# நெசவுத் தொழிலை ஊக்குவிக்க இளைஞர் பேரவை தீர்மானம்

## வீடு வீடாக விற்பனை செய்யவும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு

அறிக்கையும் ஒரு தீர்மானமும் நேற்றைய பதிப்பில் வெளியாகியுள்ளன.

"அரசின் பொருளாதாரக் கொள்கையாலும், தாராள இறக்குமதிக் கொள்கையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நெசவுத்தொழிலாளரின் துயர் துடைக்கும் நோக்குடன், குடிசைத் தொழிலாக [illegible] தொழிலைக் கொண்டிருக்கும் தொழிலாளர் உற்பத்தி செய்யும் உடைகள் தேங்கியிருக்கும் பட்சத்தில் அவற்றைக்கிராமங்கள் தோறும் விற்பனைசெய்யும் இயக்கத்தை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பொருட்டு எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று கீரிமலை சிவன்கோவிலில் தற்காலிக விற்பனை நிலையத்தைத் திறந்து விற்பனையை ஆரம்பிப்பதெனவும் தொடர்ந்து வீடு வீடாக விற்பனை செய்யவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

[illegible] திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கடந்த பொதுத்தேர்தலில் இலங்கைத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாகத் தனது பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும், அன்னை இந்திரா பகிரங்கமாகவே ஈழத்தமிழர்களுக்குஅனுதாபமாக கருத்துத்தெரிவித்தும் இருந்தார்கள். இந்தியப் பொதுத்தேர்தலில் இம்முறை போக்குக் கூட்டணி அமோக வெற்றி ஈட்டியதை பேரவைப் பொதுச்சபை வரவேற்றுப் பாராட்டுகிறது. தமிழ்ஈழவிடுதலைக்கு நாமே போராடவேண்டுமென்றாலும் எமது நியாயமான போராட்டத்தை சர்வதேசரீதியாக முன்னெடுத்துச் செல்ல உதவியாகஇருக்கக்கூடிய தி. மு. க-இந்திராகாங்கிரஸ்-முஸ்லிம் லீக்- கூட்டணியின்வெற்றி மகிழ்ச்சியைத்தருகிறது.

"தமிழ் இளைஞர் பேரவையின் தீர்மானம் எம். பி. க்களின் சிறப்புரிமையை மீறும் செயலாகும்" என்ற தலைப்பில் 2-1-1980 புதன்கிழமை ஒருபத்திரிகையில் வெளிவந்த செய்தியை பேரவைப்பொதுச்சபை கவனத்திற்கெடுத்து,அவ்வாறு பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை கிளப்பப்பட்டால் இந்நாட்டின் தார்மீக ஜனநாயகத்தை உலகறியச் செய்ய தண்டனையை ஏற்றுச் சிறை செல்லவும் பேரவை தயாராக இருக்கிறது" எனவும் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரூர் மகாசந்நிதானம் நாளை ஈழம் வருகிருர்

கோயமுத்தூர் பேரூர் ஆதீனத்து மகா சந்நிதானம் தவத்திரு வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகள் தலயாத்திரையை முன்னிட்டு இலங்கைக்கு எழுந்தருளுகின்ருர்கள். நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கப்பல் மார்க்கமாக தலைமன்ஞர் வந்தடையும் சுவாமிகள் அன்று இரவு தமிழ்நாட்டிலிருந்து கூடவே தலயாத்திரைக்கு வ ம் சுமார் 40 அன்பர்களுடன் திருக்கேதீஸ்வரத்தில் தங்குவார் மறுநாள் சனிக்கிழமை காலை பாலாவியில் தீர்த்தம் ஆடி திருக்கேதீஸ்வர நாதரை தரிசனம் செய்துகொண்டு யாழ்ப்பாணம் புறப்படுவார்.

யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கிளிநொச்சிக்குச் சமீபத்தில் உள்ள உருத்திரபுரம் காந்திநிலையத்துக்கு எழுந்தருளி அருள்மிகு நடராசப்பெருமான் ஆலயத்துக்கு அத்திபாரக்கல் நாட்டியபின் மதிய போசனம் முடித்துக்கொண்டு புறப்பட்டு பிற்பகல் 3-30 மணியளவில் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தைச் சென்றடைவார்கள். அன்று பிற்பகல் 4 மணியளவில் திருநெல்வேலியில் சுகவீனம் அடைந்திருக்கும் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையைச் சென்று பார்ப்பார்கள். மாலை 5 மணியளவில் குரும்பசிட்டி சன்மார்க்கசபையினரின் தேநீர் உபசாரத்தை ஏற்று அருளுரையாற்றுவார்கள் இரவு நல்லை ஆதீனத்தில் தங்குவார்கள் அடியார்கள் அன்பர்களுடன் சமய சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கீரிமலையில் தீர்த்தமாடியபின் மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலய தரிசனம் முடித்து அருள்மிகு நல்லைக்கந்தன் தரிசனத்துக்காக செல்வார்கள். மதிய உணவுக்குப்பின் பிற்பகல் ஒரு மணியளவில் புறப்பட்டு மாலை 5 மணிவரையில் வவனியா இளைஞர் மன்றத்தில் அருளுரை வழங்குவார்கள் இரவு அனுராதபுரத்தில் தங்குவார்கள்.

4 ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை புறப்பட்டு கன்னியா வெந்நீர் ஊற்றில் நீராடி திருக்கோணேஸ்வரம் தரிசனம் செய்வார்கள். மாலை 5 மணியளவில் இளைஞர் அருள்நெறி மன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திருக்கோணமலையில் தங்குவார்கள்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை புறப்பட்டு நண்பகல் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தரிசனம். மதிய உணவு முடித்துக்கொண்டு கண்டிக்குச் சென்று பல நிறுவனங்களையும் பார்ப்பார்கள். மத்தியமாகாண சைவமகாசபை அன்பர்களுடன் கலந்துரையாடி இரவு கண்டியில் தங்குவார்கள்.

புதன்கிழமை அதிகாலை புறப்பட்டு நாவலப்பிட்டி அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் மகாகும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டபின் ஆத்மஜோதி நிலையத்தைப் பார்வையிட்டு மதிய உணவுக்குப்பின் நுவரெலியா வழியாகப் பண்டாரவளையில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் தரிசனம் முடித்து இந்துபரிபாலன சங்க அன்பர்களுடன் கலந்துரையாடுவார்கள். பண்டாரவளையில் இரவு தங்குவார்கள்.

7 ம் திகதி வியாழக்கிழமை அதிகாலை புறப்பட்டு மதியம் கதிர்காமம் சென்றடைவார்கள். மாணிக்ககங்கை தீர்த்தம் ஆடி தரிசனம் முடித்து அன்று கதிர்காமத்து அன்பர்களுடன் கருத்துப் பரிவர்த்தனை செய்து இரவு கதிர்காமத்தில் தங்குவார்கள்.

8 ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை புறப்பட்டு மாத்தறை ஊடாக நண்பகல் காலி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய தரிசனம் செய்து அங்குள்ள அன்பர்களுடன் கலந்துரையாடி ஓய்வெடுப்பார்கள். பிற்பகல் புறப்பட்டு மாலை கொழும்பு சென்றடைவார்கள்.

**- சி. க. வேலாயுதபிள்ளை -**
(காந்தி நிலையம், உருத்திரபுரம்)

கொழும்பில் தவத்திரு வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகள் 9, 10, 11 ம் திகதிகளில் கொழும்பிலுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி சமய சம்பந்தமான கலந்துரையாடல்களையும் நடாத்திய பின்பு 11 ம் திகதி மாலை கொழும்பிலிருந்து தலைமன்ஞர் பிரயாணமாகி மறுநாள் கப்பல்மூலம் தமது அன்பர் குழாமுடன் நாடு சேர்வார். (அ)

---

சிறுபான்மைச் சமூகப் பிள்ளைகளுக்கு

## உயர் கல்லூரிகளில் இடம் வழங்க வேண்டும்

### யாழ். எம். பி. யிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள உயர் கல்லூரிகளில் விகிதாசார அடிப்படையில் கல்வி கற்கவும், வீடமைப்புத் திட்டங்களில் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புப் பெறவும் யாழ்ப்பாணம் எம். பி. நடவடிக்கை எடுக்கவேண்டுமென சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய திரு. ஆ. கணபதிநாதன் மேற்கண்டவாறு கூட்டத்தில் சமுகமளித்திருந்த யாழ், எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது சிறுபான்மைத் தமிழர்களின் இன்றுள்ள பல பிரச்னைகள்பற்றியும் ஆராயப்பட்டது.

திரு. கந்தசாமி பேசுகையில் கூறியதாவது:-

''சாதி ஒழிந்து விட்டதெனவும் எனவே இன்றுள்ள நிலையில் சாதியின் பெயரால் எந்தவொரு இயக்கங்களுக்கும் இருக்கக் கூடாது என்று ஒரு சில உயர்சாதி மக்கள் பிரச்சாரம் செய்துவருவது. மிக வருந்தத்தக்க ஒன்று. எனவும் எமது சமூகங்கள் மத்தியிலுள்ள முற்போக்கு இலக்கியங்களைப் பலவீனப் படுத்தி சமூகத்தின் முன்னேற்றத்தில் ஒரு மந்த நிலையை ஏற்படுத்தும் இரகசியத்திட்டம் இதுவெனவும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில்:

''சாதி ஒழிந்துவிடவில்லை ஒழித்துவிடுவதற்கு ஒரு சில உயர் சாதி மக்களின் மன நிலை மாறப்போவதுமில்லை. சாதிக் கொடுமை [illegible] முகமாகக் காண [illegible] டு [illegible] து. உயர் மல்லூரிகளில் எமது சமூகப் பிள்ளைகள் மிகக் குறைந்தவர்களே கல்விகற்கிருர்கள். அதுவும் சமூகத்தின் உயர் மட்டத்தில் உள்ளவர்களின் பிள்ளைகளுக்கே கிடைக்கிறது. சமூக பொருளாதார நிலையில் எங்கள் சமூகம் பின் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் எங்கள் சமூகத்தின் பெயரால் உள்ள இயக்கங்களால்தான் இவைகளிலிருந்து நாம் முன்னேற வழிகாண முடியும். எனவே இந்தக் சதி

(5-ம் பக்கம் பார்க்க)

---

★ எழுத்தாளர் டானியல் சாடுகிருர்

# இன்றைய நாடகங்கள்

## வெறும் பொழுதுபோக்குசாதனமாகிவிட்டன

### பல்கலைக்கழக வட்டத்துக்குள் கலைகளைக் காணுவோர் வெளிஉலகுக்கு வரவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''கீழ்மட்ட மக்களின் எளிமைப்படுத்தப்பட்ட கலையாக உருவெடுக்க நாடக வடிவம், இன்று மேல்மட்ட மக்களின் பொழுது போக்குச் சாதனமாகப் பயன்படுத்தப்படுவதுடன், சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு கடினப்படுத்தப்பட்டு விட்டது. சர்வகலாசாலை என்ற வட்டத்துள் கலைகளைக் காணுபவர்கள் இந்தக் காரியத்தைச் செய்து வருகின்றனர். அந்தக்குறுகிய வட்டத்தை விட்டு பரந்துபட்ட மக்கள் வாழும் வெளி உலகுக்கு இவர்கள் இறங்கி வரத்தவறின், மக்கள் பெருங்கூட்டம் இவர்களை இழுத்து வருவது நிச்சயம்''

இவ்வாறு, அரியாலையில் நடைபெற்ற பொங்கல் தின விழாவின் நாடகக் கருத்தரங்குக்கு பிரபல எழுத்தாளர் திரு. கே. டானியல் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

''உழவன் திருநாளாகிய இந்த நாளில் உழவர்கள் வாழும் பிரதேசங்களில் மெத்தப்படித்த இந்தக் கலைஞர்களால் நாடகங்களை நடத்தவே முடியாது. ஏனெனில் இவர்கள், மின்சார லீலைகளையும், ஒலிபெருக்கி உதவிகளையுமே நம்பி நாடகங்களை மேடையேற்றுகின்றனர். இவர்கள் கையாண்டு வரும் ''மைபிங்'' என்ற மாயையால் மக்களை மயக்கிவிட முடியாதென்பதனை இவர்கள் உணர மறுக்கின்றனர். இவர்களின் இந்த நெருக்குதல்களுக்குள் இந்த நாடகக் கலையைக் காப்பாற்றுவது ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும்''

மக்களால் விளங்கப் படமுடியாத எந்தக்கலையும் சிரஞ்சீவித்துவம் பெற்றதல்ல, மக்களால் விளங்கப் பட முடியாத கலை வடிவங்களை ஆக்குவோர் முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ''கலைகலைக்காகவே'' என்று போர்க்குரல் எழுப்பிய அணியின் மறுபிறப்புக்கள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்'' என்று திரு. டானியல் கருத்து வெளியிட்டார்.

---

'ஸ்ரீ கணேசபஞ்சரத்தினம்' நூல்:

## ஆயாக்கடவை பரிபாலன சபைக்கு அமைச்சு பாராட்டு

(பலாலி)

பிரதேச அபிவிருத்தி அமைச்சு, ''ஸ்ரீகணேச பஞ்சரத்தினம்,, என்னும் நூலை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. இந்நூல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பெயர்க்கப்பட்டதுடன், இதன் தமிழாக்கம் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா மலரில் இருந்து எடுக்கப்பட்டவையுமாகும். வடமொழிப் பயிற்சியற்றவர்களும் அவற்றின் ஓசை நயத்தையுணர்ந்து. இன்புறும் வண்ணம் இப்பாடல்களை ஓசை நயத்துடன் தமிழ்ப்பாவாக ஆக்கம் செய்த திரு. க. வை. ஆத்மநாத சர்மா, இதில் பொதிந்துள்ள நுண்பொருளை விரிவுரையாக விளக்கம் கொடுத்துள்ளார்.

நாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்கள் அனைத்திற்கும் ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய கணேச பஞ்சரத்தினத்தின் அருமையான தமிழாக்கத்தை கொடுத்துதவியமைக்கு ஆயாக்கடவை பரிபாலன சபையினரின் ஊக்கத்தை அமைச்சு பாராட்டியுள்ளது. அமைச்சின் இம்மலர் காஞ்சிமுனிவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியசுவாமிகள் பாதகமலங்களுக்கு சமர்ப்பணம் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூல் மொரீஷியஸ் போன்ற வெளிநாடுகளுக்கும் கிடைக்கக் கூடியதாக அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அபிவிருத்தி: ஐந்து வருடத் திட்டம்!

## உசன் வரவேற்பில் யாழ். அரசஅதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகின்றது. இதுபோன்றே குருநாகல் மாவட்டத்திலும் ஒரு திட்டம் வரையப்பட்டு உலக வங்கியின் உதவியுடன் செயல்பட்டுவருகிறது.

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருமான திரு, யோகேந்திராதுரைசுவாமிக்கும் அவரது பாரியாருக்கும் அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பில், திரு, யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு, என். பி. ஜெகநாதன் தலைமையில் இவ்வரவேற்புவிழா நடைபெற்றது.

உசன் சனசமூகநிலையத்தினர் பாராட்டுவிழாவை நடாத்தியிருந்தனர்.

### ஒருமைல் ஊர்வலம்

திரு. யோகேந்திராதுரைசுவாமியும் அவரது பாரியாரும் மிருசுவிலில் இருந்து உசன் இராமநாதன் மகாவித்தியாலடம்வரை உள்ள ஒருமைல் தூரம்வரை மேளவாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர்களான திரு. எம். பஞ்சலிங்கம், என். பி. ஜெகநாதன், எஸ். தர்மபாலன், உதவி அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் கே. துரைராசா, எஸ். முருகவேள், யாழ் செயலக உதவியாளர் திரு. எஸ். சபாரெத்தினம், திட்டமிடல் அபிவிருத்திப் பகுதி பிரதம லிகிதர் திரு. விஜயேந்திரன், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் முன்னேற்றச்சங்கத்தினர், பொது மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். வீதியின் இருமருங்கும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொருவரும் திரு. யோகேந்திராவுக்கும் அவரது பாரியாரியாருக்கும் உயர்அதிகாரிகளுக்கும் மாலை அணிவித்தும் ஆராத்தி எடுத்தும் கௌரவித்தனர்.

திரு. யோகேந்திரா துரைசுவாமிதொடர்ந்து பேசுகையில் கூறியத்தாவது:

''பிரச்சினைகளை உண்டாக்குபவனும் மனிதன் தான் அவற்றைத் தீர்த்துவைப்பவனும் மனிதன்தான். தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று எதுவுமே இல்லை. நல்ல முறையில் அணுகினால் எப்பிரச்சினைக்கும் தீர்வுகாணமுடியும்.

இந்த நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்தினால் வெளிநாட்டில் நான் அனுபவித்த சுகபோகங்களையும், உயர் பதவியையும் துறந்து வந்தேன். இப்போது நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. என்னாலான நல்ல காரியங்களை உங்களுக்குச்செய்யக் காத்திருக்கிறேன்.

''சாவகச்சேரித் தொகுதியிலுள்ள மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கு அண்மையில் விஜயம் செய்திருந்தேன், உங்கள் தேவைகளை உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வேன்'' என்று கூறினார்.

திரு. என். பி, ஜெகநாதன் தமது தலைமையுரையில் கூறியதாவது.

''யாழ் மாவட்டத்தில் கிழக்குப் பகுதி மனிதன் வாழ முடியாதிருந்தது. 1945 வரை இப்பகுதி மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தது. இப்போது அதிலிருந்து மீட்கப்பட்டாலும் இப்பகுதியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. எமது அரசாங்க அதிபர் மாணவனாக இருந்த போது நானும் அவருடன் சர்வகலாசாலையில் ஒன்றாகக் கல்வி பயின்றவன் நான். இன்று அவருடன் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றுள்ளேன். அரசாங்க அதிபர் ஜனாதிபதியின் நன்மதிப்பைப் பெற்றவர். அவரின் கோரிக்கைகளை ஜனாதிபதி தட்டிக் கழிப்பது கிடையாது. அத்தகைய ஒருவர் இங்கு வந்துள்ளதால் எமது பகுதி முன்னேற்றம் அடையக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.'' என்றார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் பேசுகையில் கூறியதாவது:- ''ஒரு காலத்தில் அரசாங்க அதிபரைக் காண வேண்டுமென்றால் இங்கிருந்து அவரது காரியாலயத்துக்குக் காரில் சென்று பலமணிநேரம் கச்சேரியில் காத்துநின்று சந்தித்துக் கதைத்தும் நாம் கேட்டதில் கால்பங்கு கூடப் பெறமுடியாத காலம் ஒன்றிருந்தது. இன்று அந்தநிலைமாறி அரசாங்க அதிபர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் உங்களை நாடி வந்து உங்கள் முன்னிலையில் உங்கள் பிரச்சினைகளைக் கேட்டறியும் படியாக நடமாடும் கச்சேரி வந்துள்ளது. அதே போல இங்கு நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைய வேண்டும். இங்கு போதிய இடவசதியுண்டு. நல்ல வைத்தியசாலை இல்லை, நல்ல வைத்திபசாலை அமைத்து நல்ல பயிற்சிபெற்ற டாக்டர்களை அனுப்பிவைக்க வேண்டும். அதன் மூலம்தான் இப்பகுதி மக்கள் பலமைல்களுக்கு அப்பால் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று வைத்தியம் பெறும் இக்கட்டான நிலையை மாற்றமுடியும்'' என்றார்.

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் பேசுகையில், ''எமது தேவைகளைப் பூர்த்தி செய்துதரக்கூடிய ஒருவர் திரு யோகேந்திரா துரைச்சாமியே. அத்தகைய நல்லவர்கள் மேன் மேலும் இப் பகுதிகளுக்கு வருகைதந்து எமது தேவைகளைக் கேட்டறிந்து பூர்த்தி செய்ய வேண்டும். அவரின் முயற்சிகள் இப்பள்ளிகூடத்திலுள்ள மாமர நிழல் ஒரு மினிக்கச்சேரியாக மாறியது எமது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு சம்பவம் என்றார். (கொ)

## தற்கொலை

(சங்கானை)

சங்கானையைச் சேர்ந்த சின்னப்பொடி கந்தன் அல்லது சோலி கழுத்தில்சுருக்கிட்டுதற்கொலை செய்துகொண்டார்.

இரண்டுபிள்ளைகளின் தந்தையான இவர் நீண்ட நாட்களாக சுகயீனமுற்றிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வீட்டிற்கு அருகாமையில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார் சங்கானைபொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்' மரண விசாரணை அதிகாரி திருகே சேனாதிராசாவிசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளித்தார்.

# இந்திய லோகசபையில் பரபரப்பு! சஞ்சய் காந்தியை விசாரித்த பொலிஸ் அதிபர் கைதானார்!

புதுடில்லி, ஜன. 30

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தியை கடந்த ஆட்சிக்காலத்தில் விசாரணை செய்த பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் திருமதி காந்தி இம்மாதம் ஆட்சிக்கு வந்தபின்னர் கைதுசெய்யப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டுள்ளார்.

இவ்வாறு இந்திய லோக சபையிலும் ராஜ்ய சபையிலும் எதிர்க்கட்சியினர் நேற்று குற்றம் சுமத்தியுள்ளனர்.

இரு சபையிலும் இது நேற்று பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

திரு. என்.கே. சிங் என்ற இந்த அதிகாரி கைது செய்யப்படவில்லை என்றும் விசாரணைக்காக மட்டும் இவர் ஹரியானுவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்றும் உள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங் லோகசபையில் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இந்த பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டது ''இருள்சூழ்ந்த அவசரகால ஆட்சியின் ஆரம்பமே' என்று முன்னாள் தகவல் அமைச்சரும் தற்போதைய ராஜ்ய சபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எல். கே. அத்வாணி தெரிவித்தார். (இ)

## சிறுபான்மை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைகளுக்கு எமது சமூக மக்களோடு எமது இயக்கங்கள் பலியாகிவிடக்கூடாது' இதே வேளை சமூகத்தின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட இயக்கங்கள் சில தனிப்பட்டோரின் சுயநல நோக்கங்களுக்காக ஒரு சிலரின் கைப் பொம்மையாக்சப்பட்டிருக்கிறது என்பதும் உண்மை. எனவே எங்களின் இந்த இயக்கமும் அந்த நிலைக்குத் தள்ளி விடக்கூடாது என்று பேசினார்.

கூட்டத்தில் கோரப்பட்ட கோரிக்கைகளுக்குத் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக யாழ்.எம்.பி. திரு வெ. யோகேஸ்வரன் உறுதியளித்துள்ளார். (கொ)

# ஆஸி. டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியா வெற்றி

அடிலெய்ட், ஜன 30

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கட் டெஸ்ட் தொடரில் மேற்கு இந்தியக்கோஷ்டி 2-0 டெஸ்ட்களால் வெற்றி பெற்றது.

இரு கோஷ்டிகளுக்குமிடையே முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. 2-வது டெஸ்டிடிலும் 3-வது டெஸ்டிலும் மேற்கிந்தியக்கோஷ்டி அமோக வெற்றியீட்டி மூன்று டெஸ்ட் தொடரின் வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது

மூன்றாவது டெஸ்டின் ஐந்தாவது நாள் ஆட்டம் இன்று ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஆஸ்திரேலியா சகல விக்கட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

மேற்கிந்தியக்கோஷ்டி 2வது டெஸ்டில் 10 விக்சட்டுகளாலும் 3வது டெஸ்ட்டில் 408 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

இறுதி டெஸ்டில் மேற்கிந்தியக் காப்டன் கிளைவ்லோயிட் 121 ஓட்டங்களையும் அல்வின் களிச்சரன் 106 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விபரம் மேற்கிந்தியா- 328,448. ஆஸ்திரேலியா 203, 167. (இ)

### தெஹ்ரானிலிருந்து

# தூதரக அதிகாரிகளை கனடாவும் அழைத்தது

(ஒட்டாவா)

தெஹ்ரானிலுள்ள தனது தூதுவரையும் தூதரக அதிகாரிகளையும் கனடா அரசு திருப்பி அழைத்துள்ளது,

இதனைத் தொடர்ந்து தெஹ்ரானிலுள்ள கனடா தூதுவரும் தூதரக அதிகாரிகளும் கனடா திரும்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுபற்றி கனடிய வெளிநாட்டமைச்சர் தெரிவிக்கையில், இந்த நடவடிக்கைமூலம் கனடா - ஈரான் உறவுகள் துண்டிக்கப்படுவதாக அர்த்தம்கொள்ளக்கூடாது என்றும் அமெரிக்க பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை இராஜதந்திரிகளை மீண்டும் அனுப்பமுடியாது என்றும் தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பைக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்சப்டுவதாகவும் கூறினார்.

ஏற்கனவே நோர்வே, மெக்ஸிக்கோ உட்பட பலநாடுசள் தமது இராஜ தந்திரிசளை தெஹ்ரானிலிருந்து திரப்பி அழைப்பித்திருந்தது தெரிந்ததே.

# "பட்டினிச்சாவை மக்கள் எதிர்நோக்கும் நிலை"

## விலைவாசி உயர்வுபற்றி செந்திவேல்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அடுத்தடுத்து அரசாங்கம் உயர்த்தி வருவதன் மூலம் மக்கள் பட்டினிச்சாவையே எதிர்நோக்க வேண்டியுள்ளனர். வசதி படைத்த பணக்காரர்களுக்கு பல வழிகளிலும் சலுகை அளித்து வரும் இன்றைய அரசு உலகச் சந்தையையும், எண்ணெய் விலையையும் சாட்டாக வைத்து மக்களை வாட்டி வதைக்கின்றது.

மேற்கண்டவாறு ''இன்றைய அரசியல் நிலையும், மக்களின் விடுதலைப் பாதையும்'' என்னும் தலைப்பில் அல்வாயில் நடைபெற்ற பகிரங்க கருத்தரங்கில் உரையாற்றிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) வடபிரதேசச் செயலாளர் திரு, கே. செந்திவேல் கூறினார். திரு. சி. முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் திரு. செந்திவேல் தொடர்ந்து பேசுகையில்,

''தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கப்படும் ஆடம்பரமான வாக்குறுதிகள் எதையும் பதவிக்கு வந்தபின் எந்த அரசாங்கமும் நிறைவேற்றுவதில்லை. அதற்குப் பதிலாக மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வையும், பொருளாதாரக் கஷ்டங்களையுமே மக்களின்மீது சுமத்துவார்கள். கடந்த காலங்களினதும், இன்றைய நிலையினதும் உண்மை நிலைமைகளை சாதாரண மக்கள் கணக்கில் கொண்டு தமது உண்மையான விடுதலைக்கான பாதையில் முன்னேற முன்வரவேண்டும். அப்பாதை தொழிலாளர்-விவசாயிகளைக் கொண்டு நடத்தப்படுகின்ற புரட்சிகரப் போராட்டப் பாதையே தவிர வேறு பாதையாக இருக்க முடியாது'' என்றும் கூறினார்.

மேலும் இக் கருத்தரங்கில் கே. தணிகாசலம், சே. தேவராசா, கே. எஸ். இரத்தினம் ஆ. தங்கராசா ஆகியோரும் உரையாற்றினர்.

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி, நடாத்தும்

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதித் தேர்வுகள்

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்று போட்டியின் அரையிறுதியாட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இன்றைய 7 வீரர் ஆட்டத்தில் 3-00 மணிக்கு ஏழாலை பறக்கும் இளைஞர் வி. கழகத்தை எதிர்த்து [illegible] 3-30 மணிக்கு இடம்பெறும் 11 வீரர் போட்டியில் கொழும்புத்துறை ஜெட்லைனேஸ் வி.கழகத்தை எதிர்த்து சவினை பறக்கும் இளைஞர் வி.கழகம் போட்டியிடும். 4-30 மணிப்போட்டியில் கொக்குவில் சன்ஸ் ரார் வி. கழகத்லத எதிர்த்து மயிலிட்டி கண்ணகி வி. கழகம் போட்டியிடும்.

### போட்டி முடிவுகள்

நேற்று முன்தினம் ஏழாலை பறக்கும் இளைஞர் வி.கழகமும் குட்டியப்புலம் அம்மன் வி.கழகமும் கலந்து கொண்ட 7 வீரர் போட்டியில் தலா ஒரு கோல்கள் போட்டமையால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இவ்மேலதிக நேரத்திலும் தலா ஒரு கோல்களைப் போட்டு மீண்டும் வெற்றியை நிச்சயிக்கமுடியாமையால் பனல்டி உதைமூலம் ஏழாலை பறக்கும் இளைஞர் வி.கழகம் வெற்றிபெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. எம். பத்மநாதன் கடமையாற்றினர். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி

# அமெரிக்க உயர்மட்டக்குழு இஸ்லாமாபாத் வருகிறது

## 40 கோடி உதவி குறித்து நேரில் பேச்சு

இஸ்லாமாபாத் ஜன,30 ஆப்கானிஸ்தான் நெருக்கடியை அடுத்து பாகிஸ்தானுக்கு இராணுவ-பொருளாதார உதவிகளை வழங்குவது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அமெரிக்க உயர் அதிகாரிகளைக் கொண்ட விசேடகுழு ஒன்று இஸ்லாமபாத் வருகிறது.

பெப்ரவரி மாதம் 2-ம் திகதி இஸ்லாமாபாத் வரும் இக்குழுவில் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரதிவெளியுறவு அமைச்சா உட்படபலஉயர் அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

ஆப்கானிஸ்தான் நெருக்கடி அதிகரித்து வருவதை அடுத்து அதன் அண்டை நாடான பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 10 கோடி டாலர் பெறுமதியான இராணுவ பொருளாதார உதவிகளை வழங்குகிறது

# இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் மாற்றங்கள்

## 'பட்ரியட்' ஏடு தரும் தகவல்

புதுடில்லி, ஜன. 30 "ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் தொடர்பாக இந்தியாவின் நிலையை ஐ. நா. சபையில் இந்தியப்பிரதிநிதிதெளிவுபடுத்தியுள்ளார். மெய்யாக நடு நிலையிலிருந்து, நிலைமைகளில் எதார்த்தங்களை இந்திய வெளிவிவகாரக் கொள்கை கவனத்திலெடுத்துள்ளது" என்று இந்திரா காந்தி அரசாங்கத்தில் வெளிவிவகாரக்கொள்கை குறித்து இங்கிருந்து வெளியாகும் "பட்ரியட்" பத்திரிகை எழுதியுள்ளது.

"ஆப்கான் விவகாரம் தொடர்பான முன்னைய அரசியலும் புதிய அரசியலும் நிலைபாடுகள் ஒன்றுக்கொன்று மாறு பட்டவை. வாஷிங்டனுடனும் சீனவுடனும் தான் கொண்டிருந்த உறவுகளை மூடி மறைக்கவே ஜனதா அரசு விரும்பியது. பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத விநியோகம் குறித்து இந்தியா அடைந்த பெருங்கவலையை சரண்சிங் வாஷிங்டனுக்குத் தெரிவித்தார். ஆனல் ஆப்கானிஸ்தானில் உள்விவகாரங்களில் அமெரிக்காவும் சீனவும் செய்த தலையீடுகள் பற்றி ஒன்றும் கூறவில்லை. அதே வேளையில் "சோவியத் யூனியன் தன் துருப்புக்களை உடனடியாக

(7ம் பக்கம் பார்க்க)

# சூரிய கிரகணத்தைப் பார்த்தால் கண்பார்வை கெடும்!

## இந்திய நிபுணர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜன 30 அடுத்த மாதம் 16-ம் இடம்பெற இருக்கும் சூரிய கிரகணத்தைப் பார்ப்பவர் கண்பார்வையை இழந்து விடுவார்கள் என்று இந்திய பார்வையில நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முக்கியமாக குழந்தைகள் இக்கிரகணத்தைப் பார்வையிடக் கூடாது என்றும் பேராசிரியர் எல். பி. அகல் வால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாதியட்டுமே தெரியும் சூரிய கிரகணத்தில் பிற்பகல் 2-28 முதல் 4-53 வரையும் கொழும்பில் 2- 27 முதல் 4-55 வரை பார்க்கக்கூடியதாக இருக்கும். (இ)

# தென்னை மரத்துக்கு ஊசி போடும்மருத்துவம்

சென்னை, ஜன. 29 தென்னையைத் தாக்கும் கருத்தலைப் புழுவினைக் கட்டுப்படுத்த தென்னைமரத்துக்கு ஊசிபோடும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊசிபோடும் முறை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு ஊசிபோடுவதுபோல நுவரான் பூச்சிகொல்வி மருந்தை, தென்னை அடிமரத்திலிருந்து ஒன்றரை அடி உயரத்திற்கு மேல் 6 அங்குலத்திற்கு துளையிட்டு அத்துளையினுள் இம்மருந்தை பாய்ச்சலாம்.

மருந்து ஏற்றப்பட்ட தென்னைமரத்திலிருந்து 45 நாட்களுக்கு தேங்காய்களையோ கள்ளையோ இறக்கிப் பாவிக்கமுடியாது. [இ]

ரஷ்யப் படைகள் வெளியேறும் வரை

# ஆப்கான்ராஜ்யஉறவுகளை இஸ்லாமிய நாடுகள் துண்டிக்க வேண்டுமாம்

## பாக். மகாநாட்டில் தீர்மானம்

இஸ்லாமாபாத், ஜன. 30 சோவியத்யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்துவெளியேறும்வரை இஸ்லாமிய நாடுகள் ஆப்கானிஸ்தானின் புதிய அரசை அங்கீகரிக்கக்கூடாது. அந்த அரசுடனை ராஜ்ய உறவுகளையும் இஸ்லாம் நாடுகள் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இஸ்லாமாபாத்தில் நடைபெற்று முடிந்த இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் குறுக்கீட்டை மகாநாடு கண்டித்துள்ள இஸ்லாமிய வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டின் உறுப்பினர் பதவியிலிருந்து ஆப்கானிஸ்தானை வெளியேற்றுவதென்றும் தீர்மானித்தது.

எந்த நாடும் ஈரானுக்கு எதிராக பொருளாதார அரசியல் தடைவிதிக்கக் கூடாது என்றும் படைபலத்தை பிரயோயோகிக்கக் கூடாது என்றும் கோரும் தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்

(7-ம் பக்கம் பார்க்க)

கட்சி மாறல் மூலம்

# மாநில அரசுகளைக் கவிழ்ப்பதை ஆதரிக்க வேண்டாம்

## மத்திய அரசிடம் கோரிக்கை

புதுடில்லி, ஜன. 30 இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் கட்சிமாறல்களினுல் சட்டசபை அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுவதை ஊக்குவிக்க வேண்டாம்.

இவ்வாறு மாநில முதல்வர்கள்,மத்திய அரசைக் கேட்டுள்ளனர்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார், பஞ்சாப், கேரளா, திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநில முதல்வர்கள் புதுடில்லியில் நடத்திய கூட்டுக்கூட்டத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்கள்.

பொதுவாகக் கட்சிமாறலை அரசு ஊக்குவிக்கக் கூடாது என்றும் இவர்கள் கோரினர். (இ)

ஆப்கான் நெருக்கடிக்கும்

# இந்திய -- சோவியத் நட்புக்கும் சம்பந்தமில்லை

## இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 30 சோவியத்-இந்திய நட்புறவுக்கும் ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீட்டுக்கும் சம்பந்தமில்லை என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனுடன் நட்புறவு ஒப்பந்தம்செய்து கொண்டதன் காரணமாக ஆப்கானிஸ்தாதில் சோவியத் தலையீட்டை இந்தியா கண்டிக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையா எனநிருபர்ஒருவர் கேட்டபோதே திருமதிகாந்தி மேற்கண்டவாறு கூறினர்.

ஒரு நாட்டில் வெளிநாடுகள் குறுக்கிடுவதையோ வெளிநாட்டுத் துருப்புக்கள் தங்கியிருப்பதையோ இந்தியா விரும்பவில்லை என்றும் திருமதி காந்தி கூறினர். (இ)




மிளகாய்
இலைச் சுருளை தடுக்கிறது
விளைச்சலை அதிகரிக்கிறது
'அக்டெலிக் 50'




பாவிக்கும் முறை
4-6 கலன் நீரில் 1 திரவ அவு. 'அக்டெலிக் 50' கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க,
CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
4-ம் மாடி, ஹேமாஸ் கட்டடம் கொழும்பு 1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மாலினி
பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ராதா
நம்பியார்
**க வி தா**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 4-45, 7-00 & 9-45
சனி, ஞாயிறு 2-45
**ODESSA FILE**

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

ஹிங்குராக்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திரு. எம். எச். பி. பெர்னாண்டோ, இம் மாதம் தொடக்கம் சங்கானை பொலிஸ் நிலைய புதியபொறுப் பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்வார். சங்கானையில் கடமையாற்றிய திரு. கே. ஏ. ஆரியபாலா இம் மாதம் தொடக்கம் பொல நறுவை பொலிஸ்நிலையத் திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

## ஆப்கான் ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடையேயான தீர்க்கப் படாத பிரச்னைகள் யாவும் அமைதியுடனும் சமாதானத் துடனும் தீர்த்து வைக்கப்படும் என நாம் நம்புவதாகவிம் மகா நாட்டின் இறுதியில் வெளியி டப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

**மனோஹரா A** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
**BOMB at 10 - 10**

**REGAL** (Jaffna)
Daily at 2 00, 4-30, 7-00 & 9-30 P.m.
Graham Dorsey became a legend after his death.
The trouble was he was still alive ..
THE MOST WANTED MEN IN THE WEST!
Charles Bronson and Jill Ireland
**"FROM NOON TILL THREE"**
The west will never be the Same again...but then neither will BRONSON. More Suited for adults.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம்புதிய பிரதி)

**லி டா** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
**Zoltan Hound of Dracula**

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
6-வது ஜனத்திரள வாரம்
ஜெனரல் **சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
**பணக்காரப் பெண்**
(புத்தம் புதிய கொப்பி)

**Shanthi** JAFFNA Phone: 7642
Daily 5 Shows - 10-30, 2-30, 4 45, 7-00 & 9-30 p.m.
We are going to kill one passenger a minute until New York City pays us 1 million Dollars''
ROBERT SHAW... HECTOR ELIZONDA
**"The Taking of Pelham One Two Three"** Scope Color
Every one read it, Now you can Live it.
Action Packed! Suspense!! Thriller!!!

## போயா தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சி இல்லை

# இன்றைய பலன்

தை மாதம் 17-ம் திகதி
வியாழக்கிழமை
(31-1-1980)

மேடம்: உடன்படிக்கை ஒன்றின்மூலம் நல்ல திருப் பம் ஏற்படும், செய்தொழி லில் புதிய உத்திகளைக் கையா ளுவீர்கள், சிறப்பான இட மாற்றமும் ஏற்பட இடமுண்டு

இடபம்: சிலருக்குப் பூமிப் பிணக்கும் நிவர்த்தியாகும், குடும்பத்திலும் சுமுகமான சூழ்நிலை உருவாகும், சகோ தர சந்தோஷமும் உண்டு, அதிர்ஷ்ட தினம்.

மிதுனம்: எதிர்பாராத விளைவுகளால் பாதிக்கப்படுவீர் கள், கூட்டு வியாபாரம் ஏமாற்றத்தைத் தரலாம், இயந்திரங்களுடன் பழகுபவர் கள் கவனம் செலுத்தவும்.

கடகம்: கண்துடைப்பு வேலைகள் இடம் பெறும், மனப் போராட்டமும் அதிக ரிக்கும், சிலருக்கு நயன ரோக மும் தென்படலாம், சுகாதா ரம் வேண்டும்.

சிங்கம்: நீண்ட நாள் தொல்லை இன்று நிவர்த்தியா கலாம், காதலர் வாழ்வில் களங்கமற்ற நாள். பொதுச னத் தலைமைக்கும் இடமுண் டாம்.

கன்னி: மனக் கவலைகள் கவலைகள் அதிகரிக்கும், வீண் பழி கேட்கவும் நேரிடும், தனி மையை விரும்புவீர்கள், நண் பர்கள் விடயத்தில் விழிப்பு ணர்ச்சி நன்று.

துலாம்: இலாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள். சிலர் புதுமனை கட்டுவதற்கும் ஆலோசிப்பர், மாதுருவழிச் சுகத்திற்குமிடமுண்டு,

விருச்சிகம்: சுபகாரியம் ஒன்றுக்கு இன்று வழி கோலப் படலாம், வாழ்க்கையிலும் வசதிகள் பெருகும், தொழில் நிலையும் சீரடையும்.

தனுசு: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமா னத்தில் வீழ்ச்சி தென்படும், வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்: இனியவை உரைத் தலின் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், குடும்பத்தி லும் களிவான நிகழ்ச்சி இடம் பெறும், செல்வாக்குப் பெருகும்.

கும்பம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும், உறவினர்களு டன் பிணக்குகள் தோன்றும், போக்கு வரத்து விடயத்தில் கவனம் வேண்டும்.

மீனம்: ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள், உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர், உஷாராக இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**

## பற்றைக்குள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபரின் மகன் துஷ் யந்தன் எனும் சிறுவனை விசா ரணை செய்த திருவாளர்கள்: உவைஸ், நில்லைநாதன், பண் டார ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியினர் பற்றை ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த தாலிக் கொடியைக் கைப்பற்றியுள் ளனர். சிறுவன் பொலிஸ் பாது காப்பில் வைக்கப்பட்டுள் ளான்.

# "தொழிலாளர் பிரச்னை தீரும்வரை சுருட்டுப் பெட்டிகள் தென்பகுதிக்குச் செல்லாது"

- முதலியார்

(யாழ்ப்பாணம்)

''இலங்கை சுருட்டுத் தொழி லாளர் சங்கம் தைப் பொங்கல் மீதிக்கணக்கான 25,230 ரூபா 78 சதத்தை முதலாளிகளிட மிருந்து பெற்று சுருட்டுத் தொழிலாளர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கியுள் ளது. மேலும் 382 சுருட்டுத் தொழிற்சாலைகளில் கணக்குத் தீர்க்காதபடியால் வேலை நிறுத் தம் தொடர்ந்து நடைபெறுகி றது.'.

இவ்வாறு இலங்கை சுருட் டுத் தொழிலாளர் சங்கத் தலை வர் திரு. சி. முதலியார் தெரி வித்துள்ளார்.

''சுருட்டுத் தொழிலாளர் களின் மீதிக் கணக்கும் தீர்க் கப்பட்டால்தான் அவர்கள் வேலைக்குச் செல்வார்கள் என் றும் சுருட்டுத் தொழிலாளர் களின் பிரச்னை தீர்க்கப்படும் வரை லொறிச் சொந்தக்கா ரர்கள் தென்மாகாணத்திற்குச் சுருட்டுப் பெட்டிகளை ஏற்றிச் செல்வதில்லையென்று உறுதி யளித்துள்ளதாகவும் திரு. முதலியார் தெரிவித்தார்.

''இணுவில், சுதுமலை, தாவடி போன்ற இடங்களி லுள்ள 15 முதலாளிமார்களே இதுவரை கணக்கைத் தீர்த் துள்ளதாகத் தெரிவித்த அவர், கணக்கைத் தீர்க்காத முதலா ளிகளிடமிருந்து 1953 ம் ஆண்டு தொடக்கம் உற்பத்தி வரி, வருமானவரி, சேமலாப வரிபோன்றவற்றை அறவிடுவ தற்கும் இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடவடி க்கை எடுத்துவருவதாகவும் அறிவித்துள்ளார்.

(வெ-ந)

# சுருட்டுத் தொழிலாளர் சம்பளம் "முதலாளிமார் வழங்கும்வரை போராட வேண்டும்"

- ஆ. துரைராஜசிங்கம்

(யாழ்ப்பாணம்)

''சுருட்டுத் தொழிலாளர் களின் சம்பளத்தை சகல முதலாளிகளும் கொடுக்கும் வரை தொடர்ந்து போராட வேண்டும்.''

இவ்வாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலா ளர் சங்கக் கமிட்டிக் கூட் டத்தில் தலைமை வகித்துப் பேசும் பொழுது மேற்படி சங்கத்தலைவர் திரு. ஆ. துரை ராஜசிங்கம் கூறினுர். அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது

சுருட்டுத் தொழிலார்களின் சம்பளத்தை முதலாளிகள் சரியாகப் கொடுக்கப் பண்ணு வதற்கு ஒருவழிதான் இருக் கின்றது. அந்தவழி தொழி லாளர்கள் தொடர்ந்து போ ராட்டத்தை நிறுத்தாமல் ஒரு முடிவு எடுத்த பின்பே வேலைக் குச் செல்வோம் என்ற சப தத்தை எடுக்கவேண்டும்.

சுருட்டுத் தொழிலாளர் களுக்காகச் சங்கமே தவிர சங்கத்திற்காகத் தொழிலா ளர்கள் இருக்கக்கூடாது. அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வதும் ஒருமுடிவுமின்றி வேலைக்குச் செல்வோமாக இருந்தால் தொழிலாளர்கள் சரியான கூலியைபெற முடி யாது.

தொழிலாளர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் விலை விஷம் போல் ஏறுகின்றது இந்த நிலைமையில் சாதாரண தொ ழிலாளர்களுக்கு இந்த வேத னமே போதாது.

பலநாட்கள் வேலையின்றி கஷ்டப்பட்டுத் தொழிலாளி கள் உயர்த்திய கூலிதான் இன்றைய 50 ரூபாய் இன் றைய நிலையில் இக்கூலியில் ஒருசதமும் விட்டுக்கொடுக் காமல் வாங்க வேண்டுமென்ற முறையில் தொடர்ந்து போ ராடுமாறு எமது சங்கம் கேட்டுக்கொள்கிறது என்றார்.

இப்போராட்டத்தை விரிவு படுத்தி வெலைநிறுத்தத்தை கைவிடாமல் தொடர்ந்து நடத்தவும் சகல சுருட்டுத் தொழிற்சாலைகளின் பிரதிநிதி கள் மகாநாடு நடத்துவதென வும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(கொ-ஈ)

## இந்திய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆப்கானிஸ்தானிலிருந்து வாபஸ் பெற வேண்டும்'' என்று சோவியத் தூதரிடம் சரண்சிங் தெரிவித்தார்.

இன்றைய அரசின் நிலை, இவ்விவகாரத்தில் முற்றிலும் மாறுபட்டது. ஐ. நா. வின் ஆப்கன் சம்பந்தப்பட்ட விசேஷ கூட்டத்தில் உரை யாற்றிய இந்தியப் பிரதிநிதி, இந்திரா காந்தியின் வெளி நாட்டுக் கொள்கைக் கருத்துக் களையே பிரதிபலித்துள்ளார். இதை முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஏ. பி. வாஜ்பாய் போன்றவர்கள் எதிர்க்கக் கூடும். ஆனால் இன்று இந்திய வெளிவிவகாரக் கொள்கை புதிய, எதார்த்த பூர்வமாக திருப்பத்தை எடுத்துள்ளது என்பதை எவரும் மறுப்பதற் கில்லை'' என்று எழுதும் ''பட் ரியட்.''

''ஆசிய, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அண்மைக் கால நிகழ்வுகள், பாகிஸ் தானை ஆயுதபாணியாக்க அமெரிக்காவும் சீனாவும் எடுத் துள்ள முயற்சிகள் பேரபாயத் தைத் தோற்றுவித்துள்ளது டன், சோவியத் யூனியனையும் பெருங் கவலைக்குள்ஆழ்த்தியுள் ளது'' என்று இந்திரா காந்தி தமது பேட்டியில் குறிப்பிட் டுள்ளதையும் 'பட்ரியட்' சுட் டிக்காட்டியுள்ளது

## முத்தமிழ் சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி முத்தமிழ் சன சமூக நிலையத்தின் வருடாந் தப் பொதுக் கூட்டம் மேற் படி நிலைய மண்டபத்தில் திரு. குணரத்தினம் தலைமை யில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் பின் வருவோர் நடப் புவருட நிர் வாக சபை உறுப்பினர்களா கத் தெரிவு செய்யப்பட் டனர்.

போஷகர்கள்: திரு. வெ. யோகேஸ்வரன். (யாழ். தே. அ. பே. உறுப்பினர்) திரு, ச. கந்தசாமி (ஓய்வுபெற்ற இரா ணுவ அதிகாரி), தலைவர்; திரு. க. ஆ. ஐயாத்துரை. (யாழூர்துரை), உபதலைவர்: சி. பரமசிவம், செயலாளர்: செ. விஜயரட்ணம், உபசெய லாளர்: ச. வீரசிங்கம், பொரு ளாளர்: இ. தவராஜா, உப பொருளாளர்: கி. தருமலிங் கம்.

மற்றும் நிர்வாக உறுப்பி னர்களும் தெரிவு செய்யப்பட் டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டன

விஞவிடைகள் A/L1980 ஏப்பிரல்
பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.
அளவையியல்
R. நவரட்ணம் B. A.
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
சாரதா ஸ்டோர்ஸ் & புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
V. P. P. மூலமும்
பெற்றுக்கொள்ளலாம்.



# ஈழநாடு The EELANAADU

50 சதம்


## இந்திய-பாக். கிரிக்கட் டெஸ்ட்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் கிரிக்கட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று முதலில் இந்திய கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 331 ஓட்டங்களை எடுத்தது. பாகிஸ்தான் கோஷ்டி பின்னர் ஆட்டத்தை ஆரம்பித்து ஒரு விக்கட்டை இழந்து 57 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## அபினுடன் ஒருவர் பிடிபட்டார்!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் திடீர் சோதனையொன்றின் போது நபரொருவர் ஒருருத்தல் அபினுடன் அகப்பட்டுக்கொண்டார். சுங்கப்பகுதி சப்-கலெக்டர் திரு. சேனரட்ண அந்நபருக்கு 2,000 ரூபா அபராதம் விதித்ததோடு, அபினையும், பறிமுதல் செய்தார். செலுத்த வேண்டிய 2,000 ரூபாவில் 1,000 ரூபாவை மட்டும் செலுத்தி, மிகுதிப் பணம் குறித்த தவணைக்குள் கட்டுவதாகவும் அந்நபர் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (நா)

யாழ்.கொன்வெண்டில்

# 2 லட்சம் ரூபா செலவில் புதிய விஞ்ஞானகூடம்

(யாழ்ப்பாணம்)

''உலகில் விஞ்ஞானம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்று திறந்துவைக்கப்பட்டுள்ள புதிய விஞ்ஞான கூடத்தை இக்கலாசாலையில் கல்வி பயிலும் மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்தி பூரணத்துவமான விஞ்ஞானக் கல்வியை பெற்று சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென நான் ஆசிக்கின்றேன்:''

இவ்வாறு இரண்டு லட்ச ரூபா செலவில் நிர்மாணம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கில வித்தியாலய புதிய விஞ்ஞான கூடத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் அதி. வண யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை, உரையாற்றுகையில் கூறினார்.

வைபவத்திற்குக் கல்லூரி அதிபர் சங்கைக்குரிய சகோதரி அன்ரன்ஜோசெப் தலைமை வகித்தார்.

புதிய விஞ்ஞான கூடத்தின் இரசாயனப் பிரிவை. யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப் பிள்ளையும் பௌதிகப் பிரிவை வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகரும், உயிரியல் பிரிவை யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் திறந்துவைத்தனர். வைபவத்தில் வித்தியாலய மாணவிகளின் 'பாண்ட்' வாத்தியம் இசைக்கப்பட்டது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

''இக்கலாசாலையில் புதிய விஞ்ஞான கூடத்தை நிறுவும் ணிக்கு கல்வித் திணைக்களம் ...தளவே உதவியது, ஆனல் இக்கட்டிடத்தை நிறுவும் பணியில் கூடிய கவனம் செலுத்தியவர்கள், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், இக்கல்லூரியின் அதிபருமாவர்.

### மன்னிப்புக் கோருகிறேன்

எனது கல்விப்பகுதி ஊழியர்கள், இக்கட்டிடத்தை நிறுவுவதற்கு நல்ல முறையில் பூரண ஒத்துழைப்பு வழங்காமல் இருந்திருக்கலாம். அதற்காக நான் மன்னிப்புக்கோருகிறேன்,

''எமது குருமார்களை நன்கு மதித்து அவர்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்க வேண்டும். அதற்கு இளைய தலைமுறையினரைப் பழக்கிக் கொள்ளவேண்டும்'' என்று கல்வி அமைச்சர் அடிக்கடி கூறுவார். இந்தப் பழக்கம் கல்லூரிகளில்தான் உருவாக வேண்டும். எனவே ஆசிரியர்கள் இவ்விஷயத்தில்

''சில கெட்ட பழக்கங்களை ஒவ்வொருவருடமும் திருத்திக் கொள்ள முயன்றும் முடியவில்லை. அந்த கெட்ட பழக்கங்களில் ஒன்று யார் என்ன கேட்டாலும் சரியென்று சொல்வதுதான்.

இக்கல்லூரியின் அதிபர் என்னை என்ன கேட்டாலும் நான் ஒருபோதும் மறுப்பதில்லை. அவர் இக்கல்லூரிக்கு விஞ்ஞானகூடம் நிறுவ இரண்டுலட்சம் தேவை ஒதுக்கித் தருமாறு கேட்டார் உங்கள் பள்ளிக்கூடத்துக்கு இரண்டு லட்சமென்ருல் மற்றப் பள்ளிக்கூடத்துக்கு எவ்வளவு கொடுப்பதென்று நான் அவரிடம் கூறினேன் எனினும் சரிதரலாம் என கூறிவிட்டேன். ஆனல் அதன்பிறகு பலபிரச்னைகளையும் சமாளிக்கவேண்டியிருந்தது.

### கல்லூரியின் தரத்திற்குசான்று

என்னை இக்கல்லூரியில் அனுமதி பெற்றுத்தருமாறு 150 பேர் தினமும் வருவார்கள் அவர்களை நான் அன்பான முறையில் நிலைமையை விளக்கி அனுப்பிவைப்பேன். இக்கல்லூரியின் தரம் சிறப்பாக இருப்பதால் தான் என்னை பலர் நாடுகிருர்கள் இக்கல்லூரிக்கு தலைசிறந்த அதிபரும் ஆசிரியர்களும் கிடைத்திருப்பதால் இக்கல்லூரியின் தரம் உயர்ந்திருக்கிறது.

### கல்லூரியின் மாப்பிள்ளை

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு, என். கே.ரகுநாதன் உரையாற்றுகையில் யாழ்ப்பாண எம். பி. எமது கல்லூரியின் மாப்பிள்ளை அவரது துணைவியார் இக் கல்லூரியில் படித்தவர் இவர் இக் கல்லூரியில் படித்தபெண்ணைமணம் முடித்தமையால்இக் கல்லூரியின் மணமாப்பிள்ளையாகத் திகழ்கிருர். இதனல்தான் இக்கல்லூரி அதிபர், எதைக் கேட்டாலும், பெண் வீட்டார் கோபிக்கக் கூடாதென உதவிவருகிருர். அவரது முயற்சியால் இக்கல்லூரி மாணவிகளுக்கு நவீன விஞ்ஞானகூடம் உருவாகியுள்ளது'' (கெ-இ)

## சிறப்புடன் நடைபெற்ற நேர்ஸிங்ஹோம் திறப்புவிழா

(நமது நிருபர்)

நொதேர்ண் பிச் ஹோட்டல் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் புதிய நிறுவனமான யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள சென்ட்ரல் நேர்ஸிங்ஹோம் திறப்புவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திறப்பு விழாவைக் குறிக்கும் முகமாக நேர்ஸிங்ஹோம் கட்டிடத்தின் வாயிலில் பூரணகும்பத்துடன் வைக்கப்பட்டிருந்த ஆள் அளவிலான குத்துவிளக்கின் பதினன்கு தீபச்சுடர்களையும். சமூகத்தின் பல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பதினன்கு பிரமுகர்கள் ஏற்றிவைத்த சிறப்பு நிகழ்ச்சி மங்களகரமாய் அமைந்திருந்தது.

சென்ட்ரல் நேர்ஸிங்ஹோம் இயக்குநர் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அழைப்பின்மீது நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வண. பிதா மத்தியஸ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர், யாழ் நீதிபதி திரு. ஆர். இராஜசிங்கம் இலங்கை வங்கி மாவட்ட மானேஜர் திரு. சி, கே. குணநாயகம், அட்டன் நேஷனல் வங்கி யாழ், கிளை மானேஜர் திரு. யோகா கோபாலகிருஷ்ணன். சட்டத்தரணி திரு. சோமசேகரம், அரஸ்கோ உரிமையாளர் திரு. ஆர். அரசரத்தினம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கணேஷ், முன்னுள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. ரி. ஜே. இராஜரத்தினம், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோர் உட்பட பதினன்கு முக்கிய பிரமுகர்கள் மங்களவிளக்கேற்றி வைத்தியசேவையை ஆரம்பித்து வைத்தனர்,

மேற்படி ஸ்தாபனத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. எஸ். பி. சாமி, திருமதி வீரலக்ஷ்மி, திரு. வி. கண்ணுதுரை, சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் பிரமுகர்களை வரவேற்றுநன்றி தெரிவித்தனர்.

......

## காதலுக்கு எதிர்ப்பு: இளைஞன் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு சென்று கப்பலில் வேலைசெய்து, பெருந்தொகையான பணத்தை தன் குடும்பத்தினருக்கு கொடுத்த ஒரு இளைஞர், தான் காதலித்த யுவதியை மணம்செய்ய குடும்பத்தினர் ஆட்சேபித்ததால் தற்கொலைசெய்துகொண்டார்.

நவாலியைச் சேர்ந்த 19 வயதான உருத்திரன் ஜெகநாதனின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்கிஸ் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவர் 17வயதில் வெளிநாடு சென்று 2 வருடங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சகோதரருக்கு உதவி அவர்களை முன்னேற்றியதாகவும், அவர் காதலித்த பெண்ணை மணம் செய்ய சகோதரர் ஒருவர் ஆட்சேபித்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இறந்தவருக்கு மூத்தவர்களான ஒரு சகோதரியும் சகோதரனும், இன்னும் மணம்செய்யாமல் இருப்பதால் அதற்கு முன், இறந்தவர் மணம்செய்வதற்கு குடும்பத்தினர் ஆட்சேபித்து வந்தனரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

சம்பவதினம், சைக்கிளில் வந்தவர் இனிமேல் எல்லோரும் சந்தோஷமாக இருங்கள் என்று கூறிவிட்டு நச்சுத்திராவகத்தை அருந்தினரெனறும், விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## இன்று

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்) கோவிலின் தைப்பூசத் திருவிழாவில் மாலை 7-30 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ''தைப்பூச மகிமை'' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார், (நா(

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்தநயினர் கோவில் தைப்பூசத் திருவிழா இன்றுகாலை நடைபெறும். (செ)

......


## தேவை

### பாலர் பாடசாலை ஆசிரியை

தட்டுவங்கொட்டிக் கிராமத்திலுள்ள பாலர் பாடசாலைக்கு, அனுபவம் உடைய பாலர் பாடசாலை ஆசிரியை தேவை.

தட்டுவங்கொட்டிக் கிராமத்திற்கு அண்மையிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பின்வரும் தகைமையுடையவர்கள், மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

1. ஜீ.சி.இ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,
2, குறைந்தது 3 வருட பாலர் பாடசாலை ஆசிரியை அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. 35 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 05-02-80 திகதியன் ஹே அல்லது அதற்கு முன்னதாகவோ கீழே தரப்படும் முகவரிக்கு கிடைக்கும்படியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

சமூக அபிவிருத்திப் பணிப்பாளர்,
சி-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

4848


## நபிகள் நாயகம் ஜனன விழா

(யாழ்ப்பாணம்)

திருநபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் ஜெனனவிழா இன்று வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் ஐந்துசந்தியில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

அல்ஹாஜ் மௌலவி எம். ஐ. முகம்மதுமீரான் முஹிதீன் ஆலிம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ். பொலிஸ் உபஅதிபர் ஜனுப் எம்.எஸ். எம். நிஸாம் கலந்து கொள்வார்.

பல அறிஞர்கள் உரையாற்றுவர்.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்[

யாழ்ப்பாணம் வாடகைக் கார் (டாக்ஸி) சேவையாளர் கூட்டுறவு சிக்கன நாணயசங்க 16வது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது,

## கர்நாடக இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றத்தின் 1980ம்- ஆண்டிற்கான கலைநிகழ்ச்சிகளுக்கான நிகழ்ச்சிநிரல் வெளிவந்துள்ளது.

எதிர்வரும் மாசி மாதம் 16ம் திகதி 'மூவர் இசை' கர்நாடக இசைநிகழ்ச்சிஒன்று நடைபெறவுள்ளது. எதிர்வரும் மே மாதத்தில் திருக்குறள் மனன, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (நா)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. GB/3948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org